பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 20 புதன்கிழமை 06.10.2021 கதிர் 199

## மூதூரில் பஸ் மோதி மூதாட்டி பரிதாபப் பலி

வீதியால் நடந்து சென்ற மூதாட்டி, பஸ் மோதி பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் மூதூர் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட திருகோணமலை வீதி, மூதூர் வைத்தியசாலைக்கு அருகில் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். 2

## 7 மாவட்டங்களுக்கு மண்சரிவு அபாயம்!

நாட்டில் தொடர்ந்து நிலவும் சீரற்ற கால நிலையால், 7 மாவட்டங் களுக்கு விடுக்கப்பட் டுள்ள மண்சரிவு அபாய எச்சரிக்கைநாளைகாலை 8.30 மணி வரை நீடிக் கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை தேசியகட்டட ஆராய்ச்சி நிறுவகம் அறிவித்துள் ளது. 2

## ஆபாச பேச்சுக்களை நாட்டில் தடைசெய்ய வருகின்றது சட்டம்!

இலங்கையில் தகவல் தொழில்நுட்பம் மற்றும் வேறு ஊடகங்கள் வாயிலாக உருவாக்கப் படும் ஆபாசப் பேச்சுக் களை தடை செய்வது தொடர்பானசட்டத்தை கொண்டு வருவதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட் டுள்ளது.

இது தொடர்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத் தில் நீதி அமைச்சர் சமர்ப் பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகா ரம் வழங்கப்பட்டுள்ளது.

தகவல் தொழில்நுட் பங்களின் ஊடான ஆபா சப் பேச்சுக்கள் தொடர் பாக நடவடிக்கை எடுக் கும் வகையில், புதிய சட்டமொன்றை 2

### சர்வதேச தினத்தில் சம்பள உயர்வை வலியுறுத்தி

# ஆசிரியர்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம்




(இ.கலையமுதன்)

இலங்கையில் 24 வருடங்களாகத் தீர்க்கப்படாமல் உள்ள அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத் தீர்த்து வைக்குமாறு கோரி அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் நாடு முழுவதும் இன்றுமாபெரும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

சர்வதேச ஆசிரியர் தினத்தை தேசிய கறுப்பு ஆசிரியர் தினமாக அறிவித்து அவர்கள் இந்த ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்தனர்.

இலங்கைஆசிரியர்சங்கம்,இலங்கை ஆசிரியர் சேவைகள் சம்மேளனம் மற்றும் ஒன்றிணைந்த சங்கங்கள் இந்த ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்திருந்தன.

நாடளாவிய ரீதியிலுள்ள 312 கோட்டக்கல்வி பணிமனைகளை அடிப்படையாகக் கொண்டு எதிர்ப்பு 2

## கீரிமலை கடலில் மூழ்கிய இளைஞர் சடலமாக மீட்பு!



(ந.லோகதயாளன்)

யாழ்., கீரிமலை கடலில் இன்று குளித்துக்கொண்டு இருந்தபோது, கடலில் மூழ்கிய இளைஞர் சடலமாக மீட்கப் பட்டுள்ளார்.

தட்டாதெருவைச் சேர்ந்த சூரியகாந்தன் சஞ்சிவன் (வயது 19) எனும் இளைஞரே நீண்ட தேடுதலுக்குப் பின்னர் சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞர் உறவினரின் அந்தியேட்டிக் கிரியைக் காக கீரிமலைக்குச் சென்று இருந்தார் எனவும், கிரியை 2

## காத்தான்குடியைச் சேர்ந்தவர் அச்சுவேலியில் சடலமாக மீட்பு




(எஸ்.நிதர்ஷன்)

அச்சுவேலி நகரில் உள்ள சிகரம் பிளாசா கட்டடத் தொகுதியில் அறை ஒன்றில் வாடகைக்குத் தங்கியிருந்தவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

அச்சுவேலி உணவகம் ஒன்றில் பணியாற்றும் ஊழியரே இவ்வாறு இன்று காலை சடலமாக மீட்கப்பட் டுள்ளார்.

காத்தான்குடி, அமானுல்லா வீதியைச் சேர்ந்த ஆதம் பாவா முகம்மது 2

## விபத்தில் முகம் சிதைவடைந்து இளைஞர் சாவு!

விபத்தில் முகம் சிதை வடைந்து இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார்.

பொல்காவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கொழும்பு - குருநாகல் வீதியில் கொழும்பு நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் எதிரே வந்த கப் ரக வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. 2

## சுழிபுரத்தில் 19 வயது யுவதி தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்பு!

(எஸ்.நிதர்ஷன்)



யாழ்., வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுழிபுரம் பகுதியில் வசித்து வந்த இளம் யுவதி ஒருவர் இன்று அதிகாலை தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆடைத்தொழிற்சாலையில் பணிபுரிந்து வரும் குறித்த யுவதியின் மரணத்துக்கான காரணம் என்ன என்று தெரிய வரவில்லை.

ஜெகதீஸ்வரன் டினுசியா (வயது - 19) என்ற யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான விசாரணைகளை வட்டுக்கோட்டைப் 2

## மேலும் 67 பேர் கைது!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 67 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பிரிவுதெரிவித்துள்ளது.

இதற்கமைய தனிமைப் படுத்தல் சட்டவிதி 2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மேலும் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
முறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைது செய்யப்பட்டோரின் எண்ணிக்கை 80 ஆயிரத்து 122 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்துக்கு உள்நுழையும் மற்றும் வெளியேறும் 13 பிரதேசங்களில் நேற்று மேற்கொள்ளப் பட்ட சோதனை நடவடிக்கையின்போது தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிப் பயணித்த குற்றச்சாட்டில் 56 வாகனங்களில் வந்த 101 பேர் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர்.

## விபத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விபத்தில் மோட்டார் சைக்கிள் செலுத் துநரும், பின் ஆசனத்தில் அமர்ந்து வந்தவரும் படுகாயமடைந்த நிலையில் குருநாகல் வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டனர். எனினும், விபத்தில் முகம் சிதைவடைந்த மோட்டார் சைக்கிள் செலுத்துநர் மரணமடைந்துள்ளார்.

மாவத்தகம பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞரே இவ்வாறு உயிரி ழந்துள்ளார்.

## கீரிமலை .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
களை முடித்துக்கொண்டு கீரிமலை கடலில் நீராடிக்கொண்டு இருந்தவேளை கடலில் மூழ்கி காணாமல்போயிருந்தார்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன் துறைப் பொலிஸாருக்கும், கடற்படை யினருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டதை அடுத்து, காணாமல்போன இளைஞரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்ட போது குறித்த இளைஞர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் காங்கேசன் துறை பொலிஸார் மேலதிக விசாரணை களை முன்னெடுத்து வருகின்றனர்.

## சுழிபுரத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர்.

## காத்தான்குடியைச் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
றவுஸ் (வயது - 46) என்பவரே சடல மாக மீட்கப்பட்டுள்ளார்.

இன்றுகாலைஅவர்அறையிலிருந்து வெளியில் வராத நிலையில் கதவை உடைத்து உள்ளே சென்று பார்த்தபோது உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள் ளார்.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை முன் னெடுத்துள்ளனர்.

## ஆபாச பேச்சுக்களை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அறிமுகப்படுத்துவதற்கான சட்ட மூலத்தை தயாரிப்பதற்காக அமைச் சரவைக் கூட்டத்தில் ஏற்கனவே தீர்மா னம் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கமைய, சட்டவரைஞரால் தயாரிக்கப்பட்ட சட்டமூலத்துக்கு சட்ட மா அதிபரின் ஒப்புதல் கிடைத்துள்ளது.

குறித்த சட்டமூலத்தை அரச வர்த்த மானியில் வெளியிடுவதற்கும், பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிப்பதற்காகவும் நீதி அமைச்சர் அலி சப்ரி அமைச்சரவையில் சமர்ப்பித்த யோசனைக்கு அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

## ஆசிரியர்கள் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடவடிக்கைகள் இன்று முன்னெடுக்கப் பட்டன.

அந்தவகையில், வடக்கு மாகாண கல்வி அமைச்சுக்கு முன்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் கவனவீர்ப்புப் போராட்டத்தில் இன்று ஈடுபட்டனர்.

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து யாழ். வலிகாமம் வலயக்கல்வி பணிமனை அமைந்துள்ள மருதனார்மடத்திலும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக் கப்பட்டது. இன்று காலை 10 மணியள வில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

அதிபர்கள், ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுக்கான தீர்வை வலியுறுத்தி வவுனியாவிலும் இன்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வடக்கு வலய ஆசிரியர் கள் காலை 9 மணிக்கு மருக்காரம்பளை பகுதியில் உள்ள கோட்டக்கல்வி அலு வலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டமையுடன், 10 மணியளவில் வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் முன்பாகவும் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதேவேளை, அதிபர்கள், ஆசிரி-யர்கள் சங்கங்களின் தொழிற்சங்கப் போராட்டம் இன்று காலை 10 மணி யளவில்நீர்கொழும்பிலும்இடம்பெற்றது. பதாகைகளை ஏந்தி, கோஷங்களை எழுப்பி ஆசிரியர் சமூகத்தினர் போராட் டத்தில் ஈடுபட்டனர்.

இதனிடையே, மன்னார் மாவட்ட அதிபர் ஆசிரியர்கள் மடு வலயக்கல்வி அலுவலகத்திற்கு முன்பாக கவன வீர்ப்பில் ஈடுபட்டனர்.

பண்டாரவளை கல்வி வலயத்துக் குட்பட்ட அதிபர்கள், ஆசிரியர்கள் பண்டாரவளை பஸ் நிலையத்துக்கு அருகே இன்று முற்பகல் 11 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேவேளை, கொழும்பு உள்ளிட்ட ஏனைய இடங்களிலும் சம்பள முரண்பாட்டைத் தீர்த்து வைக்குமாறு கோரி அதிபர்கள், ஆசிரியர்கள் இன்று மாபெரும் கவனவீர்ப்புப் போராட் டங்களில் ஈடுபட்டனர்.

## மூதூரில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விபத்தில் படுகாயமடைந்த குறித்த மூதாட்டி மூதூர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோது மரணமடைந்துள் ளார்.

மூதூர் பிரதேசத்தைச் சேர்ந்த 70 வயது பெண்ணே இவ்வாறு உயிரிழந் துள்ளார்.

பஸ்ஸின் சாரதியைக் கைதுசெய்து விசாரணைகளை மேற்கொண்டுவரும் பொலிஸார், அவரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## 7 மாவட்டங்களுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதன்படி, நுவரெலியா, இரத்தினபுரி, கேகாலை, களுத்துறை, காலி, மாத் தறை மற்றும் அம்பாந்தோட்டை மாவட் டங்களுக்கான மண்சரிவு அபாய எச் சரிக்கை தொடர்ந்தும் நீடிக்கப்பட்டுள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## விடயம் ஒன்று: விசாரணைகள் பல!

அநுராதபுரம் சிறையில் தமிழ் அரசியல் கைதிகள் அப்போதைய சிறைத்துறை அமைச்சரினால் அச்சுறுத்தப்பட்ட விவகாரம் பற்றிய விசாரணை சூடு பிடித்திருக்கிறது.

ஒரே சமயத்தில் பல தரப்புகள் சமாந்தரமாக விசாரணைகளை நடத்துகின்றன. கடைசியில் மலையைக் கெல்லி எலியைப் பிடித்த கதையாகி விடக்கூடாது. இந்த விவகாரம். பல சமையல்காரர்கள் சேர்ந்து 'சூப்'பைக் கொடுத்த மாதிரியும் ஆகிவிடக்கூடாது.

கடந்த மாதம் 12ஆம் திகதி திடீரென அனுராதபுரத்திற்கு ஹெலிக்கொப்டரில் போய் இறங்கிய அமைச்சர் லொஹான் ரத்வத்தை மது போதையில் அங்குள்ள சிறைக்குள் நுழைந்து, தமிழ் அரசியல் கைதிகளை அழைத்து, அச்சுறுத்தி முழந்தாளிட வைத்து, கைத்துப்பாக்கியை தலையில் அழுத்தி மிரட்டினார் என கூறப்படுகின்றது.

இது தொடர்பிலும், அதற்கு முதல் வாரம் வெலிக்கடை சிறைக்குள் முன்னிரவு வேளை தமது மது போதைக் கும்பலுடன் உள்ளே நுழைந்து அவர் அட்டகாசம் பண்ணினார் என்று கூறப்படுவது குறித்தும் சிறைத்துறை தனியான துறைசார் விசாரணையை நடத்துகின்றது. சிறைச்சாலை ஆணையாளர் எஸ்.கொடித்துவக்கு இந்த விடயம் குறித்து விசாரணை நடத்துகிறார். அவரின் இறுதி அறிக்கை விரைவில் – சுமார் இரண்டு – வாரங்களில் சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் துஷாரா உபுல் தெனியவிடம் கையளிக்கப்படும் எனத் தெரிகின்றது.

இதேசமயம், கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் இயக்கம் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் மனித உரிமைகள் ஆணையகம் தன்பாட்டில் ஒரு விசாரணை நடத்துகிறது. அதன் அறிக்கையும் விரைவில் தயாராகி விடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதேவேளை குற்றப்புலனாய்வு திணைக்களம் பிறிதொரு விசாரணையைப் புலனாய்வு பின்புலத்தில் முன்னெடுப்பதாகவும் கூறப்படுகிறது. அதன் முடிவு உரிய நடவடிக்கைகளுக்காக பொலிஸ்மா அதிபரிடம் கையளிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் என்ற முறையில் சிறைத்துறை தனக்கு கீழ் வருகின்ற காரணத்தினால் இந்த விடயம் குறித்து நீதியமைச்சர் அலி சப்ரி தனியான விசாரணை நடத்துவதற்கு ஓய்வு பெற்ற மேல் நீதிமன்ற நீதிபதி குசலா சரோஜினி வீரவர்தனவை நியமித்திருக்கின்றார். அவரின் விசாரணையும் தனித்துவமாக முன்னெடுக்கப்படுகின்றது.

இதற்கிடையில் இந்த அச்சுறுத்தலை பாதிக்கப்பட்ட 10 தமிழ் அரசியல் கைதிகளில் எண்மர் தமது சட்டத்தரணி ஊடாக இந்த அச்சுறுத்தல் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்துள்ளனர். அந்த மனு பரிசீலிக்கப்பட்டு இடைக்கால உத்தரவும் நீதிமன்றத்தினால் வழங்கப்பட்டுவிட்டது. அரசமைப்பின் 11ஆவது சரத்தின் கீழ் சித்திரவதை குற்றச்சாட்டும் இந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளமையால் இந்த மனுவும் முக்கியத்துவம் பெறுகின்றது. நடந்த விடயங்களின் உண்மைத்தன்மை உறுதிப்படுத்தப்பட வேண்டுமானால் இவ்விடயம் குறித்து விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தை உயர்நீதிமன்றம் கோரக்கூடும்.

ஒரே விடயத்துக்காக பலமுனைகளில் விசாரணைகள். சம்பந்தப்பட்ட தரப்பினர், பாதிக்கப்பட்ட கைதிகள், சம்பவம் இடம்பெற வாய்ப்பளித்து நின்றவர்கள் என்று கூறப்படும் சிறை அதிகாரிகள், குற்றம் சுமத்தப்பட்ட பக்கத்தினர் என எல்லோரும் பல மட்டங்களில் விசாரணைகளை ஒட்டி வாக்குமூலம் அளிக்க வேண்டி இருக்கும்; அளித்திருப்பார்கள்.

பார்ப்போம் விசாரணை அறிக்கைகள் எப்படி வருகின்றன என்று. குருடர்கள் யானை பார்த்த கதையாக விடயம் முடியாவிட்டால் சரி.

## மாகாணத்துக்குட்பட்ட பாடசாலைகளை 21 ஆம் திகதி ஆரம்பிப்பதற்குத் தீர்மானம்



நாடாளாவிய ரீதியில் மாகாண சபையால் நிர்வகிக்கப்படும் 200 மாணவர்களுக்குக் குறைவான ஆரம்பப் பாடசாலைகளைக் கல்வி நடவடிக்கைகளுக்காக எதிர்வரும் 21ஆம் திகதி முதல் திறக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார்.

ஒன்லைன் தொழினுட்பத்தின் ஊடாக நடைபெற்ற மாகாண ஆளுநர்களின் கலந்துரையாடலின் போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

குறித்த தீர்மானத்திற்கு அமைவாக ஊவா மாகாணத்தில் 200 மாணவர்களுக்குக் குறைவான 434 பாடசாலைகள் எதிர்வரும் 21ஆம்திகதிதிறக்கப்படவுள்ள அதேவேளை, அதற்கான நடவடிக்கைகள் தற்பொழுது முன்னெடுக்கப்பட்டுள்ளன எனவும் ஆளுநர் குறிப்பிட்டார்.

திறக்கப்படவுள்ள பாடசாலைகள் அமைந்துள்ள பிரதேசம் மற்றும் வலயத்துக்குப் பொறுப்பான அரசியல் பிரமுகர்கள் மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்களுக்கு இது தொடர்பாக அறிவிக்கப்படவுள்ள அதேவேளை, அவர்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்த்துள்தாகவும் ஆளுநர் தெரிவித்தார்.

மேலும், பிரதேச செயலாளர்கள் மற்றும் அபிவிருத்தி அதிகாரிகளின் உதவிகள் தேவைப்படும் பட்சத்தில் அவர்களையும் இணைந்து கொள்ள மாவட்டச் செயலாளர்களுக்கு ஆளுநர் ஆலோசனை வழங்கினார்.

பாடசாலைகளைத் திறக்கும் வேலைத்திட்டங்கள் அனைத்தும் சுகாதார ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளுக்கு அமைவாக முன்னெடுக்கவும், பாடசாலை போக்குவரத்து வசதிகளை வழங்கவும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு ஆளுநரால் ஆலோசனை வழங்கப்பட்டது.

அத்துடன் நீண்ட இடைவெளிக்குப் பின்னர் பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படவுள்ளதால், மாணவர்களின் உள்ளங்களைப் பாடசாலையுடன் இணைக்கும் நோக்கில் முதல் வாரத்தில் பாடத்திற்குப் புறம்பான செயற்பாடுகளில் ஈடுபடச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

மேலும், அனைத்து பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், கல்விசார ஊழியர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் போக்குவரத்தில் ஈடுபடும் சாரதிகள் கொவிட் தடுப்பூசி பெற்றுக்கொள்வதன் அவசியம் தொடர்பில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் அனைத்து மாகாண ஆளுநர்கள், மாகாண பிரதம செயலாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட கல்வித் துறையுடன் தொடர்புடைய அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

## பண்டோரா ஆவணம் குறித்து விரிவான விசாரணை வேண்டும்

### அமைச்சரவையில் முன்மொழிவு



பண்டோரா ஆவணங்கள் மற்றும் அது நாட்டில் ஏற்படுத்தக்கூடிய பாதிப்பு தொடர்பாக நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

அமைச்சரவை நேற்று இரவு கூடிய போது இந்த விடயம் தொடர்பாகக் கேள்வி எழுப்பப்பட்டதாக அரசு வட்டாரங்கள் தெரிவித்தன என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அமைச்சரவைக் கூட்டத்தில் பல அமைச்சர்கள், நிருபமா ராஜபக்ஷ மற்றும் அவரது கணவர் திருக்குமார் நடேசன் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் தொடர்பாகக் கருத்து தெரிவித்தனர் என அந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அமைச்சரவை கூட்டாக ஒப்புக்கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணை ஆரம்பிக்கப்படுமென அரசு அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலகளவில் முறைகேடாக வெளிநாட்டில் கறுப்புப் பணத்தை பதுக்கி வைத்தவர்கள் பெயர் அடங்கிய ஆவணங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

பன்டோரா பேப்பர்ஸ் என்ற பெயரில் வெளியான இந்த ஆவணத்தில், இலங்கையின் முன்னாள் அமைச்சரான நிருபமா ராஜபக்ஷவின்பெயர்உள்ளடக்கப்பட்டுள்ளது.

நிருபமா ராஜபக்ஷ மற்றும் அவரது கணவர் நடேசன் இருவரும் இணைந்து லண்டன் மற்றும் சிட்னியில் சொகுசு குடியிருப்புகளை வாங்குவதற்கும், முதலீடு செய்வதற்கும் ஷெல் நிறுவனத்தை பயன்படுத்தினர் என அந்த அறிக்கை விரிவாகக் கூறுகிறது.

மேலும் நடேசனின் நீண்டகால ஆலோசகர், 2011 ஆம் ஆண்டு நிலைவரப்படி, அவரது ஒட்டுமொத்த சொத்தாக 16 கோடி டொலருக்கும் அதிகமாக வைத்திருந்தார் என இரகசிய மின்னஞ்சல்களை மேற்கோளிட்டு தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஏசியாசிட்டி டிரஸ்ட் நடேசனின் சில வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் அறக்கட்டளைகளை நிர்வகித்தது என்றும் இதன் சொத்து மதிப்பு சுமார் ஒரு கோடியே 80 லட்சம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் குறித்த இரகசிய ஆவணங்கள் தொடர்பாக நிருபமா ராஜபக்ஷ மற்றும் நடேசன் ஆகியோர் பதிலளிக்க மறுத்து விட்டனர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் 2010 முதல் 2015 வரை நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பின் பிரதி அமைச்சராக பணியாற்றிய நிருபமா ராஜபக்ஷ, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நெருங்கிய உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடகொரியா – தென்கொரியா இடையே தொலைபேசி தொடர்பு ஆரம்பம்



வடகொரியா மற்றும் தென் கொரியா இடையே, அவசர நேரடி தொலைபேசி தொடர்பு வசதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட அவசர நேரடி தொலைபேசி தொடர்பு வசதியில், எல்லைதாண்டி அதிகாரிகள் தகவல்களைப் பரிமாறிக் கொண்டனர் என தென் கொரியாவின் ஒருங்கிணைப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தென்கொரியாவின் ஒருங்கிணைப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'இதன்மூலம் இரு நாடுகள் இடையிலான உறவைப் புதுப்பிக்கவும், கொரிய தீபகற்பத்தில் நிலைத்தன்மையை ஏற்படுத்தவும் அடித்தளம் அமைக்கப்பட்டுள்ளது. முந்தைய உடன்பாடுகளை அமுல்படுத்துவது தொடர்பாக இரு நாடுகள் இடையே பேச்சு மீண்டும் தொடங்கும் என நம்புகிறோம்' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகள் இடையிலான தொலைத்தொடர்பு வசதிகளை மீண்டும் தொடங்குவது குறித்து வடகொரியா தலைவர் கிம் ஜோங் உன் கடந்த வாரம் விருப்பம் தெரிவித்திருந்ததோடு தென் கொரியா தனது இரட்டை நிலைப்பாட்டைக் கைவிட வேண்டும் எனவும் கூறியிருந்தார்.

உறவைப் புதுப்பிக்க நினைக்கும் தென்கொரியாவின் விருப்பத்தைப் பயன்படுத்தி, அமெரிக்கா தங்கள் நாட்டுக்கு எதிராக விதித்துள்ள பொருளாதாரத் தடைகளிலிருந்து விலக்கு பெற வடகொரியா முயல்வதாக நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில் தற்போது இரு நாடுகளுக்கும் இடையிலான அவசர நேரடி தொலைபேசி தொடர்பு வசதி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளும் அண்மைக் காலமாக அடுத்தடுத்து ஏவுகணை சோதனைகளை மேற்கொண்டு வந்ததால் இரு நாடுகளுக்கான அவசர நேரடி தொலைபேசி தொடர்பு வசதி மற்றும் தொலைநகல் வசதியும் ஓராண்டாக செயற்படவில்லை. இராணுவ அதிகாரிகள் இடையே எல்லையோர ஆலோசனைக் கூட்டத்தை நடத்தவும், மோதலைத் தவிர்க்கவும் இந்த வசதிகளை இரு நாடுகளும் பயன்படுத்தி வந்தன.

# ஆப்கானிஸ்தான் மக்களுக்கு பாஸ்போர்ட் வழங்க தீர்மானித்துள்ள தலிபான்கள்




ஆப்கானிஸ்தானில் நேற்று முதல் மீண்டும் பொதுமக்களுக்கு பாஸ்போர்ட் வழங்கவுள்ளோம் என தலிபான்கள் அறிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானிலிருந்து அமெரிக்கா, நேட்டோ படைகள் வெளியேறியதும் ஆப்கானை தலிபான்கள் கைப்பற்றினர். அங்கு ஜனநாயக அரசை அகற்றிய தலிபான்கள், இடைக்கால இஸ்லாமிய எமிரேட் அரசை நிறுவப் போகிறோம் என அறிவித்துள்ளனர். ஆப்கான் பிரதமராக முல்லா முகமது ஹசன் அகுந்த் நியமிக்கப்பட்டுள்ளனர்.

ஆப்கானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றியதும் அங்கு பொதுமக்களுக்கு பாஸ்போர்ட் மற்றும் விசா வழங்கும் நடைமுறைகள் நிறுத்தப்பட்டிருந்தன. இந்நிலையில், ஒரு மாதத்துக்குப் பிறகு ஆப்கானில் மீண்டும் பொதுமக்களுக்கு பாஸ்போர்ட் வழங்க உள்ளோம் என தலிபான்கள் தெரிவித்துள்ளனர்.

ஓகஸ்ட் மாதம் முதல் ஆப்கானைத் தலிபான்கள் தங்களது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர். அதனால், ஆப்கானிலிருந்து பிற நாடுகளுக்குச் செல்ல பாஸ்போர்ட்கள், விசா வழங்கப்படாமல் இருந்தன. இந்நிலையில் நேற்று (5) முதல் 5,000 – 6,000 வரையிலான பாஸ்போர்ட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படவுள்ளன என தலிபான்கள் அறிவித்துள்ளனர் என ஆப்கான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன



# இரண்டு தசாப்தங்களுக்கு பிறகு குறைந்த அளவில் புதிய கார் பதிவுகள்!

தொழில்துறையின் வர்த்தக அமைப்பின் புள்ளிவிவரங்களின்படி, புதிய கார் பதிவுகள் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக செப்டெம்பரில் மிகக் குறைந்த அளவிற்கு சரிந்தன.

மோட்டார் தயாரிப்பாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம், புதிய பதிவுகள் செப்டெம்பர் 2020இல் இதே காலத்துடன் ஒப்பிடும்போது 35 சதவீதம் குறைந்துள்ளதாகக் கூறியது.

உலகளாவிய கணினி சில்லுகளின் பற்றாக்குறை காரணமாக கார் உற்பத்தி வீழ்ச்சியடைவதாகக் கூறப்படுகிறது.

எலக்ட்ரிக் கார்களின் விற்பனை வேகமாக அதிகரித்து வருவதாக மோட்டார் தயாரிப்பாளர்கள் மற்றும் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. ஒட்டுமொத்தமாக கார் சந்தை தொற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், செப்டெம்பரில் ஒரு மாதத்தில் 32,000க்கும் மேற்பட்ட மின்சார கார்கள் பதிவு செய்யப்பட்டன, கிட்டத்தட்ட 2019இல் 37,850 மின்சார கார்கள் பதிவு செய்யப்பட்டன. இதற்கிடையில், செப்டெம்பரில் வெறும் 214,000 கார்கள் மட்டுமே விற்கப்பட்டன.

23 ஆண்டுகளுக்கு முன்பு பிரித்தானியாவுக்கான தற்போதைய பதிவு முறை அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்து இந்த மாதத்தின் மிகக் குறைவான மொத்த கார்கள் விற்பனை இதுவாகும்.



# பிரான்ஸ் விமானங்களுக்கு அல்ஜீரிய வானில் பறக்கத் தடை!

பிரான்ஸுக்கும் அல்ஜீரியாவுக்கும் இடையில் ரஜீக உறவுகளில் ஏற்பட்டிருக்கின்ற விரிசல்கள் தீவிரமடைகின்றமை தெரிகிறது. பிரான்ஸின் இராணுவ விமானங்கள் தனதுவான் பரப்பினுள் பறப்பதற்கு அல்ஜீரியா தடைவிதித்திருக்கிறது.

இதனால் ஆபிரிக்காவின் சாஹல் பிராந்தியத்தில் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்ற பிரான்ஸின் போர்விமானங்கள் அல்ஜீரிய வான்பரப்பின் ஊடாகப்பறக்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது.

நேற்றுக் காலை அல்ஜீரிய வான் எல்லைக்குள் பிரவேசித்த இரண்டு விமானங்கள் தடுக்கப்பட்டன என்பதை பிரான்ஸின் இராணுவப் பேச்சாளர் ஒருவர் உறுதிப்படுத்தி உள்ளார்.

பிரான்ஸின் முன்னாள் குடியேற்ற நாடாகிய அல்ஜீரியா தொடர்பில் அதிபர் மக்ரோன் வெளியிட்டிருந்த சில கருத்துக்களுக்கு ஆட்சேபம் வெளியிடும் நோக்கில் பாரிஸில் உள்ள தனது தூதரை அல்ஜீரியா திருப்பி அழைத்திருந்தது. அதன் தொடர் நடவடிக்கையாகவே தற்போது பிரான்ஸின் விமானங்களுக்கு அது தடைவிதித்திருக்கிறது.

# ஓமானில் புயல்; 13பேர் உயிரிழப்பு!

வெப்ப மண்டலப் புயலான ஷாஹீன், பாரசீக வளைகுடாப் பகுதியைத் தாக்கியதில் ஈரான் மற்றும் ஓமானில் குறைந்தது 13 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஓமானின் வடக்குக் கடற்கரையோர பகுதிகளில் 150 கி.மீ. வேகம் வரையில் காற்று வீசியதால் பெய்த கடும் மழையால் அங்கு கடுமையான வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதில், வடக்கில் உள்ள அல் படினா மாகாணத்தில் 7 பேர் உயிரிழந்தனர் என ஓமான் அதிகாரிகள் தெரிவித்தனர். நீரில் மூழ்கியோ, நிலச்சரிவினாலோ மேலும் 4பேர் இறந்தனர். இதேவேளை இரண்டு மீனவர்களின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன என ஈரான் அரச ஊடகம் தெரிவித்துள்ளது. தென் கிழக்கு மாகாணமான சிஸ்டான் – பலுசெஸ்தானில் இருந்து சென்ற மேலும் 3 மீனவர்களைக் காணவில்லை. இந்தப் பகுதி பாகிஸ்தான் எல்லை அருகே அமைந்துள்ளது. இந்தப் புயல் தென் மேற்கு திசையில் நகர்ந்து நிலப்பகுதியில் நுழைந்து பலவீனமடைந்த நிலையில், ஐக்கிய அரபு அமீரகத்தில் பல பகுதிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மிக அவசரத் தேவை இருந்தால் ஒழிய, அல் அவின் நகர மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேற வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

மஸ்கட் நகரில் 200 மி.மீ. மழை பதிவானது என்றும், அங்கிருந்து வட மேற்கு திசையில் உள்ள அல் கொபூரா என்ற இடத்தில் 369 மி.மீ. மழை பதிவானது என்றும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்தப் புயலால் கடற்கரையில் 10 மீற்றர் அதாவது 32 அடி உயரம் வரையில் அலைகள் எழுந்தன.





# கலவர வழக்கில் மோடி விடுவிக்கப்பட்டமையை எதிர்த்த மனு ஒக்டோபர் 26 இல் உச்சநீதிமன்றத்தில் விசாரணைக்கு

குஜராத் வன்முறை வழக்கில் நரேந்திர மோடி குற்றமற்றவர் எனக் கூறி சிறப்பு புலனாய்வுக் குழு விடுவித்ததை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை வரும் 26 ஆம் திகதி உச்ச நீதிமன்றம் விசாரிக்க உள்ளது.

கடந்த 2002ஆம் ஆண்டு குஜராத்தின் கோத்ராவில் ரயில் எரிக்கப்பட்ட கலவரத்தில் கிட்டத்தட்ட 59 பேர் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து குஜராத்தில் மிகப்பெரிய அளவில் வன்முறை வெடித்தது. இந்த வன்முறையின் பின்னணியில் அப்போதைய குஜராத் முதல்வர் மோடி மற்றும் உயரதிகாரிகள் இருந்தனர் எனக்கூறி வழக்கு தொடரப்பட்டது. இது தொடர்பில் விசாரித்த சிறப்பு புலனாய்வுக் குழு, மோடி மற்றும் 63 பேர் மீதான குற்றச்சாட்டுக்கு போதிய முகாந்திரம் இல்லை என கடந்த 2012ஆம் ஆண்டு அவர்களை வழக்கில் இருந்து விடுவித்தது. இதை எதிர்த்து ஜக்கியா ஜாஃப்ரி என்பவர் தொடர்ந்த வழக்கை குஜராத் உயர் நீதிமன்றம் 2017ஆம் ஆண்டு தள்ளுபடி செய்தது. இதனையடுத்து ஜக்கியா ஜாஃப்ரி தரப்பில் 2018ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இதன் மீதான விசாரணை தொடர்ந்து தள்ளி வைக்கப்பட்டு வந்த நிலையில் தற்போது அதை வரும் 26ஆம் திகதி விசாரிக்கிறோம் என நீதிபதிகள் தெரிவித்துள்ளனர்.

# லக்கிம்பூர் சம்பவம் தொடர்பாக எந்த விசாரணைக்கும் தயார்

## என்கிறார் மத்திய இணையமைச்சர்



உத்தரப்பிரதேச மாநிலம் லக்கிம்பூர் விவகாரம் தொடர்பாக எந்தவொரு விசாரணையையும் சந்திக்கத் தயார் என மத்திய உள்துறை இணையமைச்சர் அஜய் மிஸ்ரா தெரிவித்துள்ளார்.

உத்தரப்பிரதேசத்தின் லக்கிம்பூரில் விவசாயிகள் போராட்டத்தில் பா.ஜ.க. மத்திய இணையமைச்சரின் மகனுடைய கார் மோதியதில் நான்கு பேரும், இதைத் தொடர்ந்து நிகழ்ந்த கலவரத்தில் ஐந்து பேரும் உயிரிழந்தனர்.

விவசாயிகள் மீதான இந்தத் தாக்குதலைக் கண்டித்து லக்கிம்பூர் செல்ல முயன்ற காங்கிரஸ் பொதுச்செயலாளர் பிரியங்கா காந்தி தடுத்து நிறுத்தப்பட்டு, தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார். இதற்கிடையே பொது அமைதிக்கு குந்தகம் விளைவித்தனர் என பிரியங்கா காந்தி, தீபேந்திர ஹூடா உள்ளிட்ட 11 பேர் மீது சிதாபூர் மாவட்ட பொலிஸ் தரப்பில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. உத்தரப் பிரதேச முன்னாள் முதலமைச்சர் அகிலேஷ் யாதவ், பஞ்சாப் முதலமைச்சர் சரண்ஜித் சிங் சன்னி, சத்தீஸ்கர் முதலமைச்சர் பூபேஷ் பாகேல் ஆகியோர் லக்கிம்பூருக்குச் செல்லவும் தடை விதிக்கப்பட்டது.

இந்தநிலையில் லக்கிம்பூர் வன்முறை தொடர்பாக எந்தவொரு விசாரணைக்கும் தயாராக இருக்கிறேன் என மத்திய இணையமைச்சர் அஜய் மிஸ்ரா தெரிவித்துள்ளார். சம்பவம் நிகழ்ந்த இடத்தில் மகனுடன், தானும் இருந்தேன் எனக் கூறுவதில் உண்மை இல்லை என்றும் வன்முறைக்கு காரணமானவர்கள் நிச்சயம் தண்டிக்கப்பட வேண்டும் என்றும் மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ரா தெரிவித்துள் ளார்.

# உத்தரப்பிரதேசத்தில் நடப்பது ராம ராச்சியம் அல்ல மக்களைக் கொல்லும் ராச்சியம் என மம்தா சாடல்



உத்தரப்பிரதேச மாநிலம் லகிம்பூர் கேரி மாவட்டத்தில் விவசாயிகள் போராட்டத்தில் நடந்த வன்முறையில் 9 பேர் கொல்லப்பட்டனர்.

இது குறித்து திரிணாமுல் காங்கிரஸ் தலைவர் மம்தா பானர்ஜி வெளியிட்ட டுவிட்டர் பதிவில், 'உத்தரப்பிரதேசத்தில் நடப்பது ராம ராச்சியம் அல்ல, மக்களைக் கொல்லும் ராச்சியம்.

அங்கு விவசாயிகள் கொடூரமாகக் கொல்லப்பட்டுள்ளனர். அந்த மாநிலத்தில் நடைபெற்றிருப்பது அராஜகமானது, துரதிர்ஷ்டவசமானது.

லகிம்பூர் கேரியில் நடந்த காட்டுமிராண்டித்தனமான செயலை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். விவசாய சகோதரர்கள் மீது பா.ஜ.க. காட்டும் அலட்சியம் எனக்கு மிகுந்த வலியை ஏற்படுத்துகிறது. விவசாயிகளுக்கு எப்போதும் எங்கள் நிபந்தனையற்ற ஆதரவு தொடரும்'என்று தெரிவித்துள்ளார்.

# லக்கிம்பூருக்குச் செல்ல அரசியல் பிரமுகர்களுக்கு உத்தரப் பிரதேச அரசு அனுமதி வழங்கியது



உத்தரப் பிரதேச மாநிலத்தில் பாதிக்கப்பட்ட விவசாயிகளைச் சந்திக்க லக்கிம்பூருக்கு காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தலைமையிலான 5 பேர் கொண்ட குழு இன்று செல்லவிருந்த நிலையில், அவரது பயணத்திற்கு அந்த மாநில அரசு இன்று காலை அனுமதி மறுத்தது.

இதைத்தொடர்ந்து டெல்லியில் வைத்து காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி இன்று காலை செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது பேசிய அவர், 'இச்சம்பவத்தின் பின்னணியில் உள்ள மத்திய அமைச்சர் அஜய் மிஸ்ரா மற்றும் அவரது மகன் இருவரும் கைது செய்யப்படவில்லை. இச்சம்பவம் நடந்த லக்கிம்பூர் செல்ல எனக்கு உத்தரப் பிரதேச அரசு தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஆனால், எங்களுக்கு இது பொருந்தாது என்றே நான் சொல்வேன். என்னையும் என் குடும்பத்தினரையும் துன்புறுத்தினாலும் நாங்கள் விவசாயிகளுக்கு ஆதரவாக நிற்போம். இந்த விடயத்தில் காங்கிரஸ் அரசியல் செய்யவில்லை, இறந்த விவசாயிகளின் குடும்பத்துக்கு நியாயம்தான் கேட்கிறோம்.

எதிர்க்கட்சிகளின் பணியே, அரசுக்கு அழுத்தம் கொடுப்பதுதான். எதிர்க்கட்சிகளின் அழுத்தத்தால்தான் இன்று அரசுத் தரப்பில் இந்த அளவிற்காவது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஊடகங்கள் உள்ளிட்ட அனைத்து ஜனநாயக அமைப்புகளையும் அரசு கட்டுப்படுத்துகிறது. இந்த விவகாரத்தில் விவசாயிகளின் கோரிக்கையை மத்திய அரசு தனது அகங்காரத்தின் காரணமாக நிராகரிக்கிறது என்று குறிப்பிட்டிருந்தார்.

ராகுல் பேட்டியளித்தையடுத்து தற்போது விவசாயிகள் உயிரிழந்த லக்கிம்பூர் கேரி பகுதிக்குச் செல்ல ராகுல்காந்தி, பிரியங்கா காந்தி உள்ளிட்ட அரசியல் பிரமுகர்களுக்கு உத்தரப் பிரதேச அரசு அனுமதி அளித்துள்ளது. அதனைத் தொடர்ந்து டெல்லியில் இருந்து விமானம் மூலம் உத்தரப்பிரதேசத்தின் லக்னோவுக்கு ராகுல் காந்தி, சத்தீஸ்கர் முதல்வர் பூபேஷ் பாகல், பஞ்சாப் முதல்வர் சரண்ஜித் சிங் ஆகியோர் புறப்பட்டுள்ளனர் என்று செய்திகள் தெரிவிக்கின்றன. முன்னதாக அங்கு சென்றிருந்த பிரியங்கா காந்தி தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவில் வாகன ஒலியெழுப்பிகளில் இனிய இசை விரைவில் சட்டமென போக்குவரத்து அமைச்சர் தகவல்



இந்தியாவில் வாகனங்களின் ஒலியெழுப்பிகளில் இந்திய இசைக் கருவிகளின் இசை மட்டுமே ஒலிக்கவேண்டும் என கட்டுப்பாடு விதிக்கும் புதிய சட்டம் வரவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மராட்டிய மாநிலத்தின் நாசிக் நகரத்தில் நடந்த விழா ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய இந்திய போக்குவரத்துத்துறை அமைச்சர் நிதின் கட்காரி, அம்புலன்ஸ் மற்றும் பொலிஸ்துறை வாகனங்களில் ஒலிக்கும் ஒலியெழுப்பிகளின் சத்தம் மிகவும் எரிச்சலூட்டுகிறது என்றும், குறிப்பாக அமைச்சர்களின் வாகனங்கள்சாலைகளில்கடக்கும்போது அவற்றின் பாதுகாப்பு எச்சரிக்கை ஒலியின் அளவை அதிகபட்சத்தில் வைத்து விடுவதாகவும் குறிப்பிட்டார்.

இதுபோன்ற அதீத ஒலிகள் காதுகளுக்கு தீங்கு விளைவிக்கும் என்பதால், அம்புலன்ஸ், பொலிஸ் வாகனங்களில் ஒலிக்கும் சைரன்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டு காதுக்கு ஆபத்தில்லாத, இனிமையான ஒலியைப் பொருத்த முடிவு செய்துள்ளதாகவும், இந்தியாவில் வாகன ஒலியெழுப்பிகளில் இந்திய இசைக் கருவிகளின் இசை மட்டுமே ஒலிக்கவேண்டும் என கட்டுப்பாடு விதிக்கும் வகையில் ஒரு புதிய சட்டம் இயற்றப்படும் எனவும் அவர் கூறியிருக்கிறார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# மட்டக்களப்பில் தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக குறைந்தது




மட்டக்களப்பு மாவட்டத்தில் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்றனர் எனவும் 92 வீதமானவர்கள் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளதுடன் 85வீதமானவர்கள் இரண்டாவது தடுப்பூசியைப்பெற்றுக்கொண்டுள்ளனர் என மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் நா.மயூரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடந்த 24மணி நேரத்தில் 29 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டதுடன் எந்தவித மரணங்களும் இடம்பெறவில்லையென வும் இதுவரையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 336மரணங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் முடக்கத்திற்கு பின்னர் புதிய தொற்றாளர்கள் வெகுவாக குறைந்துவருகின்றனர் எனவும் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.


பொதுமக்கள் சுகாதார வழிமுறைகளை பின்பற்றி செயற்படுவதன் மூலமே மீண்டும் ஒரு கொத்தணி உருவாவதை தடுக்கமுடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதனால் புதிய தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதுடன் இறப்பு வீதமும் குறைந்துள்ளதாகவும் அனைவரும் தடுப்பூசி பெற்றுக்கொள்வது அவசியம் எனவும் தெரிவித்தார்.

20வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருவகின்றன எனவும் அருகில் உள்ள வைத்தியசாலைகளிலோ,சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்திலோ தடுப்பூசிகளைப்பெற்றுக்கொள்ளுமாறும் அவர் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பைஸர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெற்றுள்ளன என வும் இவை 12 தொடக்கம் 19வயதுக்குட்பட்ட விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கும் கிளினிக்சென்றுவரும் சிறுவர்களுக்கும் செலுத்தப்பட்டுவருவதாகவும் அவ்வாறானவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் ஆதார வைத்தியசாலைகளில் இந்த தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் தெரிவித்தார்.

## அம்பாந்தோட்டை முதல் அம்பாறை வரையான இடங்களில் சிலந்திவலையை ஒத்த பொருள்கள் வானிலிருந்து வீழ்ந்தன



அம்பாந்தோட்டை முதல் அம்பாறை வரையிலான சில பகுதிகளில் சிலந்தி வலையை ஒத்த பொருள் வானிலிருந்து வீழ்ந்திருந்தன.

அம்பாந்தோட்டை - சூரியவெவ, வல்சப்புகல, நடகஸ்வெவ உள்ளிட்ட சில பகுதிகளில் இந்த வலை இன்றும் காட்சியளித்தது.

நேற்று முன்தினம் காலை 8 மணியில் இருந்து பிற்பகல் 2 மணி வரை சிலந்தி வலையை ஒத்த பொருள் வானிலிருந்து வீழ்ந்ததாக நியூஸ்பெஸ்ட் செய்தியாளர் கூறினார்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள சில கிராமங்களிலும் சிலந்தி வலையை ஒத்த பொருள் வீழ்ந்திருந்தது.

அவ்வப்போது வானிலிருந்து இந்த பொருள் வீழ்ந்ததாக ரஜகலதென்ன, கல்கந்த ஆகிய பிரதேச மக்கள் கூறினர்.

மஹியங்கனை நகரை அண்மித்த பகுதியிலும் இத்தகைய பொருள் வீழ்ந்திருந்தது.

இது தொடர்பாக விமானப்படையின் ஊடகப்பேச்சாளர், குரூப்கப்டன் துஷான் விஜேசிங்கவிடம் வினவிய போது -

விமானங்களின் செயற்பாடுகள் காரணமாக அவை வானிலிருந்து விழவில்லை என்பதை அவர் உறுதிப்படுத்தினார்.

இதேவேளை, கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் சந்தன ஜயரத்ன பின்வருமாறு தெரிவித்தார்,

இது இயற்கையானது. இந்த காலப்பகுதியில் சிலந்திகள் அதிகளவில் முட்டைகளை இடுகின்றன. அதிலிருந்து ஆயிரக்கணக்கான சிலந்திகள் வெளிவருகின்றன. அந்த சிலந்திகள் உணவைத் தேடி செல்லும்போது வயிற்றில் இருந்து நூலை போன்ற ஒன்றை வெளியிடுகின்றன. பறக்கும் அந்த நூலில் அவை தொற்றி பயணிக்கின்றன. இது எமக்கு மாத்திரம் உரித்தானது அல்ல. பல நாடுகளில் இந்த விடயம் நிகழ்கின்றது. மேற்கு நாடுகளிலும் இவ்வாறு நிகழ்கின்றன என்று கூறினார்.




## வருமான வரி உத்தியோகத்தர் இலஞ்சம் வாங்கியதால் கைது

மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனை தென் எருவில்பற்று களுதாவளை பிரதேச சபையில் பணியாற்றும் வருமானவரி உத்தியோகத்தர் ஒருவர் நேற்று இலஞ்ச ஒழிப்பு திணைக்கள அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன் அவர் எதிர் வரும் 18ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இவர் கொழும்பில் இருந்து வருகை தந்த இலஞ்ச ஊழல் ஒழிப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் பிரதேச சபைக்கு முன்பாக கடமையில் ஈடுபட்டிருந்த இலஞ்ச ஒழிப்பு பிரிவினர் நபரொருவரிடம் குறித்த உத்தியோகத்தர் இலஞ்சத்தினை பெற்றபோது கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் களுவாஞ்சிகுடி பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, களுவாஞ்சிகுடி சுற்றுலா நீதிமன்ற நீதிபதியின் வாசஸ்தலத்திற்கு கொண்டு சென்று முன்னிலைப்படுத்தியபோது எதிர்வரும் 18.10.2021 ஆந் திகதி வரை மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளதுடன், இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவின்வேண்டுகோளுக்கு அமைவாக 18 ஆந் திகதி மேலதிக விசாரணைகளுக்காக கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும் அனுமதியளித்தார்.

பொதுமகனுக்கான ஆவணம் ஒன்றினை வழங்குவதற்காக 250,000 லட்சம் கோரிய உத்தியோகத்தர் ஏற்கனவே 25,000 பணம் வேண்டியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றமை யுடன், நேற்றைய தினம் இரண்டாவது தடவையாக 25,000 பணத்தை இலஞ்சமாக பெற்றபோதே குறித்தகைது இடம்பெற்றுள்ளது.

## மாநகரசபையின் பதில் ஊழியர் இடைநிறுத்தம்; நியமன ஊழியர்கள் பணிப்பகிஷ்கரிப்பு



மட்டக்களப்பு மாநகரசபையினால் நியமிக்கப்பட்ட பதில் ஊழியர் ஒருவரின் நியமனம் எவ்வித அறிவிப்பும் இன்றி நீக்கப்பட்டதாகவும், அவரின் நியமனம் புதுப்பிப்பதற்கான காலத்தில் இருந்து ஒரு மாதகாலம் சேவையில் ஈடுபட்டிருந்தும் அவருக்கான சம்பளம் வழங்கப்படாமல் நிறுத்தப்பட்டுள்ளதாக வும் தெரிவித்து, அவரின் சம்பளம் மற்றும் பதில் நியமனக் கடிதம் வழங்குமாறு கோரி மாநகர பதில் ஊழியர்களில் சாரதிகளாக நியமிக்கப்பட்ட ஊழியர்கள் இன்றைய தினம் பணிப்பகிஷ்கரிப்பினை மேற்கொண்டிருந்தனர்.

மட்டக்களப்பு மாநகரசபையில் பதில் சுகாதார ஊழியர்கள் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்பட்ட ஊழியர்கள் சிலர் தற்காலிக வாகன சாரதிகளாகக் கடமைக்கு நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் நியமனங்கள் ஒவ்வொரு ஆறுமாத காலங்களுக்கும் புதுப்பிக்கப்படும். அவ்வாறு இருக்கையில் ஒரு ஊழியரின் நியமனம் மாத்திரம் முதல்வரால் புதுப்பிக்கப்படவில்லை என்றும், அவரின் நியமனம் புதுப்பிக்கப்படும் என்ற ரீதியில் அவர் கடமையாற்றிய ஒரு மாத கால சம்பளமும் வழங்கப்படவில்லை எனவும் கோரியே இப்பணிப்பகிஷ்கரிப்பு இன்று மேற்கொள்ளப்பட்டது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு நோய் எச்சரிக்கை!

மட்டக்களப்புமாவட்டத்தில்அடிக்கடி பெய்து வருகின்ற மழையினால் டெங்கு நோய் பரவுவதற்கானவாய்ப்புஅதிகளவில்காணப்படுவதாக சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். மக்கள் தமது ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் டெங்கு நோய் பரவுவதை கட்டுப்படுத்த முடியும். அரசு மற்றும் சுகாதார திணைக்களத்தினரும் டெங்கு கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர். வீடுகளில் நீர் தேங்கி நிற்கும் இடங்களை உடனடியாக துப்புரவு செய்து நீர் தேங்காத வகையில் சரிசெய்து கொள்ள வேண்டும். வீடுகளில் வசிக்கும் குழந்தைகள் வயோதிபர்கள் மற்றும் ஏனையோரின் பாதுகாப்பு கருதி வீட்டுச் சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ளுமாறு சுகாதாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். கொவிட் முடக்க நிலை காரணமாக நீண்ட நாள்களாக இயங்காமல் இருந்த அலுவலகங்கள், பாடசாலைகள், வழிபாட்டுத்தலங்கள், பொதுச் சந்தைகள் மற்றும் அனைத்து பொது இடங்களையும் சுத்தம் செய்த பின்னரே மக்கள் பாவனைக்கு உட்படுத்துவதற்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

அடிக்கடி பெய்து வருகின்ற மழையினால் நீர் தேங்கி டெங்கு நுளம்புகள் பெருகும் அபாயம்காணப்படுவதினால்மக்கள் அவதானத்துடன் செயற்படுவது மிகமிக அவசியமாகும்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு







# மும்பை இந்தியன்ஸின் பந்துவீச்சில் சுருண்டது ராஜஸ்தான் ரோயல்ஸ்

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் நேற்று நடைபெற்ற 51 ஆவது லீக் போட்டியில் மும்பை இந்தியன்ஸ் அணி 8 விக்கெட்டுக்களால் ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியை இலகுவாக வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட ராஜஸ்தான் ரோயல்ஸ் 20 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களைமாத்திரமேபெற்றுக்கொண்டது. அதிகபட்சமாக எவின் லூயிஸ் 24 ஓட்டங்களை எடுத்தார். மும்பை இந்தியன்ஸ் அணியின் நதன் குல்டர்நைல் 14 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். ஜேம்ஸ் நீசாம் 3, பும்ரா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

அடுத்துக் களமிறங்கித் துடுப்பெடுத்தாடிய மும்பை இந்தியன்ஸ் அணி 8.2 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுக்களை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது. இசான் கிசான் ஆட்டமிழக்காது 50 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார். ராஜஸ்தான் அணியின் முஸ்தபிசுர் ரஹ்மான் மற்றும் சேத்தன் சகாரியா ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீதம் வீழ்த்தப்பட்ட இரு விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர். இந்தப் போட்டியின் நாயகனாக நதன் குல்டர்நைல் தெரிவானார். நேற்றைய போட்டியில் பெற்ற வெற்றியின் மூலம் புள்ளிப் பட்டியலில் ஐந்தாமிடத்தைப் பிடித்து அடுத்த சுற்றுக்குள் நுழையும் வாய்ப்பினை மும்பை அணி தக்கவைத்துக்கொண்டுள்ளது.



# ஐ.பி.எல். அடுத்த சீசனில் டோனி விளையாடுவார்?

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைவர் மகேந்திர சிங் டோனி தற்போதைய ஐ.பி.எல். சீசனுடன் ஓய்வு பெறுவார் என்ற பேச்சு வலம்வந்துகொண்டிருந்த வேளையில், அவர் அடுத்த சீசனிலும் விளையாடுவார் என்ற தகவல் வெளியாகியுள்ளது. சென்னை அணியின் நிர்வாகிகளான இந்தியா சிமெண்ட்ஸ் ஏற்பாடு செய்த நிகழ்வொன்றில் ரசிகர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே டோனி இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கடந்த 2020 ஓகஸ்ட் 15 ஆம் திகதியன்று அனைத்து சர்வதேச கிரிக்கெட்டிலிருந்தும் ஓய்வு பெறுகிறேன் என டோனி அறிவித்திருந்தார். ஏன் அந்தத் திகதியைத் தேர்ந்தெடுத்தீர்கள்? விடைபெறும் போட்டியொன்றை விளையாடவில்லையே? என்ற கேள்விகளுக்கு பதிலளித்தபோது, அதைவிட சிறந்த நாள் இருக்கமுடியுமா? என்று பதில் கேள்வி எழுப்பினார் டோனி. நான் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுகிறேன் என்ற அறிவிப்பை சொல்ல சுதந்திர தினத்தைவிட சிறந்தவொரு நாள் இருக்காது என எண்ணி அதைச் செய்தேன். அதே நேரத்தில் எனக்கான விடைபெறும் போட்டியாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்காக சென்னையில் நான் விளையாடும் போட்டி அமைய வாய்ப்புள்ளது. அதைவிட சிறந்ததொரு விடைதரும் நிகழ்வு எனக்கு இருக்க முடியுமா என்ன? என டோனி பதில் அளித்துள்ளார்.

இந்த உரையாடல் மூலம், அடுத்த ஐ.பி.எல். சீசனிலும் டோனி விளையாடுவதற்கான வாய்ப்பிருப்பதை அவரே உறுதிசெய்துள்ளார் என அவரது ரசிகர்கள் சமூகவலைத்தளங்களில் பதிவிட்டுவருகின்றனர்.

## அபுதாபி ரி–10 லீக் தொடரில்

# வனிந்து ஹஸரங்க டெக்கானில் தொடர்ந்தும்

ஐந்தாவது பருவகாலத்திற்கான அபுதாபி ரி-10 லீக் தொடரின் அணி வீரர்கள் விவரம் அறிவிக்கப்படவுள்ள நிலையில், இந்தத் தொடரில் பங்கேற்கும் அணிகளில் ஒன்றான டெக்கான் கிளேடியேட்டர்ஸ் அணி தமது வீரர் குழுவில் இலங்கையின் சகலதுறைவீரரான வனிந்து ஹஸரங்கவினை தொடர்ந்தும் தக்கவைத்திருக்கத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்திருக்கின்றது.

வனிந்து ஹஸரங்கவுடன் இங்கிலாந்தின் வேகப்பந்து சகலதுறை வீரரான டைமல் மில்ஸ், வேகப்பந்து வீச்சாளர் ஹூர் கான் ஆகியோரையும் தாம் தொடர்ந்தும் தக்க வைத்திருப்பதாகவும் டெக்கான் கிளேடியேட்டர்ஸ் அணி நிர்வாகம் கூறியிருக்கிறது. டெக்கான் கிளேடியேட்டர்ஸ் அணியின் முன்னிலை நட்சத்திர வீரராக மேற்கிந்திய தீவுகளின் அதிரடி சகலதுறைவீரரான அன்ட்ரே ரசல் உள்ளார்.

ரி-20 போட்டிகளில் முக்கிய பந்துவீச்சாளராகத் திகழும் வனிந்து ஹஸரங்க, தற்போது இந்தியன் பிறீமியர் லீக் போட்டிகளில் ரோயல் சலஞ்சர்ஸ் அணிக்காக விளையாடி வருகின்றார். அண்மையில் இலங்கையில் வைத்து இந்திய அணிக்கெதிராக முதல் தடவையாக ரி-20 தொடர் ஒன்றை வெல்வதற்கும் இவரது பங்களிப்பு பிரதானமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ச்சியாக திறமையை வெளிப்படுத்திவரும் சிறப்பான சகலதுறைவீரர்களில் ஒருவரான வனிந்து ஹஸரங்கவை தமது அணிக்காக தொடர்ந்தும் விளையாடவைப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம் என டெக்கான் கிளேடியேட்டர்ஸ் அணியின் உரிமையாளர் கௌரவ் க்ருவர் தெரிவித்திருக்கிறார். டெக்கான் கிளேடியேட்டர்ஸ் அணியினால் தொடர்ந்து தக்கவைக்கப்பட்ட விடயம் தொடர்பில் கருத்து வெளியிட்டிருக்கும் வனிந்து ஹஸரங்க, 'தனது துடுப் பாட்டமும், பந்துவீச்சும் ரி-10 போட் டிகளுக்கும் பொருந்தும் வகையில் அமைந்திருக்கின்றது எனத் தெரிவித்திருக்கிறார். இது தனக்கு டெக்கான் கிளேடியேட்டர்ஸ் அணியில் அன்ட்ரே ரசல் போன்ற முன்னணி வீரர்களுடன் இணைந்து விளையாடுவதற்கான வாய்ப்பினை தந்திருப்பதாகவும் அதன் தலைமைப் பயிற்சியாளராகவுள்ள தனது சிறுவயது கதாநாயகனான சுழல்பந்து வீச்சாளர் முஸ்தாக் அஹமட்டிடம் கற்றுக்கொள்வதற்கு கிடைத்த சிறந்த வாய்ப்பு இது என்றும் கூறியிருக்கிறார்.

அபுதாபி ரி-10 லீக் தொடரின் ஐந்தாவது சீசன் போட்டிகள் எதிர்வரும் நவம்பர் மாதம் 19ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் மாதம் 4 வரை நடைபெறவுள்ளன.



# மன்னாரில் பொலிஸ் காவலில் உயிரிழந்த குடும்பஸ்தரின் சடலம் திங்கள் அடக்கம்

## மரணத்தில் உறவினர்கள் சந்தேகம்

மன்னாரில் பொலிஸ் காவலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் திடீர் சுகவீனம் காரணமாக மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு உயிரிழந்த இளம் குடும்பஸ்தரின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்ட நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

மன்னார் எருக்கலம் பிட்டி பகுதியைச் சேர்ந்த இருவர் கடந்த முதலாம் திகதி வெள்ளிக்கிழமை இரவு ஓட்டோவில் புதுக்குடியிருப்பு பகுதிக்குச் சென்று மீண்டும் எருக்கலம்பிட்டி கிராமத்தை நோக்கி வந்துள்ளனர்.

இதன் போது எருக்கலம்பிட்டி – புதுக்குடியிருப்பு பிரதான வீதியில் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்ட மன்னார் பொலிஸார் மேற்படி இருவரையும் மறித்து ஓட்டோவைச் சோதனையிட்ட நிலையில் போதைப் பொருள் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் இருவரையும் கைது செய்தனர்.

இந்த நிலையில் குறித்த இருவரையும் மறுநாள் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை மன்னார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்ட நிலையில் எஸ்.எம். ரம்ஸான் (வயது-29) என்ற இளம் குடும்பஸ்தருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது.

உடனடியாக மன்னார் பொலிஸார் இளம் குடும்பஸ்தரை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் 2 ஆம் திகதி சனிக்கிழமை காலை சேர்த்தனர். இந்நிலையில் அந்த நபர் மாவட்ட பொது வைத்தியசாலையில் உயிரிழந்தார்.

குறித்த நபர் மன்னார் பொலிஸ் நிலையத்தில் வைத்து கடுமையாக தாக்கப்பட்ட நிலையில் உயிரிழந்திருக்க கூடும் என உறவினர்கள் சந்தேகம் எழுப்பியுள்ளனர்.

இந்நிலையில் சடலம் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் பிரேதஅறையில் வைக்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இந்த உயிரிழந்த இளம் குடும்பஸ்தருக்கு கொரோனாத் தொற்று இல்லை எனத் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் திங்கட்கிழமை மதியம் சடலம் சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

திங்கட்கிழமை இரவு மன்னார் எருக்கலம்பிட்டில் உள்ள அவரது இல்லத்தில் வைக்கப்பட்டு பின்னர் முஸ்லிம் மையவாடியில் சடலம் அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதேவேளை மன்னாரில் பொலிஸ் தடுப்புக் காவலில் இருந்த இளைஞன் உயிரிழப்பு தொடர்பாக இலங்கை மனித உரிமை ஆணைக்குழு விசாரணையை ஆரம்பித்துள்ளது.

அண்மையில் மன்னார் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இருவரில், சம்சுதீன் மொஹமட் றம்சான் என்பவர், சுகவீனம் காரணமாக மன்னார் வைத்தியசாலையில் சேர்த்த வேளையில் உயிரிழந்தார் எனச்செய்திகள் வெளியாகி இருந்தன.

இந்நிலையில் இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சொந்த பிரேரணை அடிப்படையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வடக்கு பிராந்திய இணைப்பாளர் த.கனகராஜ் தெரிவித்துள்ளார். கடந்த முதலாம் திகதி கைதுடன் தொடர்புடைய விடயங்கள், மன்னார் பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரியிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அந்த வகையில், பிரேத பரிசோதனை அறிக்கை பெறுவதற்கான வேண்டுகோள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட மற்றொரு நபரிடமிருந்து வாக்குமூலம் பெறுவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குறித்த முறைப்பாடு 1996 ஆம் ஆண்டு 21ஆம் இலக்க இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சட்டத்தின் பிரிவு14 இன்பிரகாரம்ஆணைக்குழுவின் சொந்த பிரேரணையாக பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## ஆனைவிழுந்தான் வயந்காணிகளை மக்களுக்கு கையளிக்கும் சாத்தியம் குறித்து நேரில் ஆராய்வு

கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத்தலைவர், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் பணிப்பில், கரைச்சிப் பிரதேச செயலகப் பிரிவுக்குள் இருக்கும் ஆனைவிழுந்தான் வயற்காணியை மக்களுக்கு மீள வழங்கக்கூடிய சாத்தியப்பாடுகள் தொடர்பாக ஆராய்வதற்காக அதிகாரிகள் குழு நேற்று (செவ்வாய்க்கிழமை) நேரில் அங்கு சென்றிருந்தது.

கரைச்சிப் பிரதேச செயலாளர் பாலசிங்கம் ஜெயகரன் தலைமையில், காணி உத்தியோகத்தர், வனவளத் திணைக்களப் பணிப்பாளர், கிராமசேவையாளர் ஆகியோருடன், அமைச்சரின் மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் ஆகியோர் இணைந்த குழுவினர் உள்ளூர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளுடன் ஆனைவிழுந்தான் வயல்காணி பிரதேசத்தைப் பார்வையிட்டனர். அந்தப் பகுதியில் கடந்த காலத்தில் வயற்செய்கை நடைபெற்றமைக்கான ஆதாரமாக, கொங்றீட் கட்டுமானங்களாக நீர் விநியோக வாய்க்கால்கள் இருக்கின்றமை இதன்போது பிரதேச செயலாளர், அமைச்சரின் மேலதிக இணைப்பாளர் ஆகியோர் வனவளத் திணைக்களப் பணிப்பாளரிடம் சுட்டிக் காட்டினர்.

இந்தப் பகுதியில் 1985 ஆம் ஆண்டு காலப் பகுதியில் நெற்செய்கை இடம்பெற்றதாகவும், பின்னர் மோதல் சூழல்களால் மக்கள் இடம்பெயர்ந்த காரணத்தால் அது கைவிடப்பட்டதாகவும் பிரதேச வாசிகளும், முன்னாள் கிராமசேவையாளர்களும் எடுத்துக் கூறினர்.

இவற்றைச் செவிமடுத்த வனவளத் திணைக்களப்பணிப்பாளர் மகேஷ்சேனநாயகா, இதுபற்றிய விரிவான அறிக்கையொன்றை தமக்குத் தருமாறு பிரதேச செயலாளரிடம் கோரியதுடன், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கமைய அந்த வயற்காணிப் பகுதியில் மீண்டும் நெற்செய்கையில் ஈடுபடக்கூடிய சாத்தியங்கள் தொடர்பாக விரைவில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்தார்.

இந்த முறை காலபோகத்துக்கு அந்தப் பகுதி விவசாயிகளுக்கு வயல்காணிகளை வழங்கவேண்டும் என்ற அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் எண்ணத்தையும் இதன்போது அவரது மேலதிக இணைப்பாளர் கோ.றுஷாங்கன் வனவளத் திணைக்களப் பணிப்பாளரிடம் எடுத்துச் சொல்லி, துரிதமாக உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டார்.

## விசேட தேவைக்குட்பட்ட சிறுவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும்பணி வவுனியாவில்



வவுனியா மாவட்டத்தில் 12 தொடக்கம் 19 வயதுக்கு உட்பட்ட விசேட தேவையுடைய சிறுவர்களுக்கு பைஸர் தடுப்பூசி ஏற்றும் பணிகள் வவுனியா மாவட்ட வைத்தியசாலையில் நேற்று (செவ்வாய்க்கிழமை) ஆரம்பமாகி இடம்பெற்றுவருகின்றன.

நாடளாவிய ரீதியில் 12 தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட விசேட தேவையுடையவர்களுக்கு பைஸர் தடுப்பூசிகள் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் வட மாகாணத்திலும் அண்மையில் பைஸர் தடுப்பூசிகள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டு தடுப்பூசி ஏற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு இருந்தன.

அந்தவகையில் வவுனியா மாவட்டத்தில் 12 தொடக்கம் 19 வயதுக்குட்பட்ட விசேட தேவையுடைய சிறுவர்களுக்கான பைஸர் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் நேற்று வவுனியா மாவட்டத்தில் ஆரம்பமாகி இடம்பெற்று வருகின்றன. முதற்கட்டமாக 60 பேருக்கு நேற்றையதினம் தடுப்பூசி வழங்கப்பட்டது.

பைஸர் தடுப்பூசியை வழங்க மன்னாரில் இருந்து வருகைதந்த வைத்தியர் சுதாகர் தலைமையிலான தாதியர்கள், வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் மற்றும்சுகாதாரத்துறையினருடன் இணைந்து இந்த தடுப்பூசி ஏற்றும் பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## கொவிட் உறுதியானவர்களில் சிலருக்கு மன அழுத்த நோய்!

### ஆலோசனை பெற விசேட இலக்கம்

கொரோனாத் தொற்று உறுதியானவர்களில் சிலருக்கு மன அழுத்தம் ஏற்படக்கூடும் என இலங்கை மருத்துவ சங்கம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக சந்தோசமின்மை, அதிகரித்த கோபம், உணவின் மீதான நாட்டமின்மை, நித்திரையின்மை போன்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என அந்தச் சங்கத்தின் மனநல விசேட வைத்தியர் சஜிவன அமரசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும் இந்த அறிகுறிகளானவை, நாளடைவில் மன அழுத்தமாக மாறக்கூடும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தநிலையில், இவ்வாறு மன அழுத்தத்துக்கு உள்ளாகுபவர்கள், 247 மற்றும் 1926 ஆகிய அவசர இலக்கங்களுடன் தொடர்புகொண்டு ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

## தேர்தல் தொடர்பில் சகல தரப்புடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுப்போம்!

### அமைச்சர் தென்னகோன் தெரிவிப்பு

மாகாணசபைத் தேர்தலை நடத்துவதா இல்லையா என்பது தொடர்பாக சகல தரப்புடனும் கலந்துரையாடி தீர்மானம் எடுக்கப்படும் என உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன் தெரிவித்தார். நாடாளுமன்றத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை), வாய்மூல விடைகளுக்கான வினாக்கள் நேரத்தில், எதிர்க்கட்சி உறுப்பினர் ரோஹாண பண்டார இது தொடர்பில் கேள்வி எழுப்பினார். தேர்தல் நடத்தப்படும் என்றால் புதிய முறையில் நடக்குமா அல்லது பழைய முறைமையில் நடத்தப்படுமா என்றும் அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர் ஜனக பண்டார தென்னகோன், மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கான சூழ்நிலை தற்போது இல்லை என கூறினார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 06.10.2021இல் வெளியிடப்பெற்றது.